மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தான்குளம்

முன்னிலை திரு.M.சிவராஜேஷ், B.B.A.L.L.B.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சாத்தான்குளம்.

2026ம் ஆண்டு ஜூலை மாதம் 16ஆம் நாள் வியாழக்கிழமை

இ.ம.எண்.1/2026

in

அ.வ எண்.64/2025

1. ராமசாமி (இறப்பு)

2. ராமச்சந்திரன் ... 1, 2 மனுதாரர்கள்/1, 2 வாதிகள்

/ எதிர் /

3. பிச்சைக்கனி

4. பட்டுக்கனி

5. நாராயணராஜ்

6. பார்த்தசாரதி

7. தனலெட்சுமி ... 3 முதல் 7 மனுதாரர்கள்/ புதிதாக சேர்க்கக் கோரும் நபர்கள்

1. அகஸ்டின்

2. முரளிதரன் ...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது 09.7.2026 இன்று இறுதி விசாரணைக்கு எடுக்கப்பட்டு 1, 2மனுதாரர்கள்/1, 2 வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T.பஞ்சாப் சேகர் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.ஜோ.ஜெகதீஷ் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதம் கேட்கப்பட்டும், மனு மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

உத்தரவு

இம்மனுவானது இந்த வழக்கில் காலஞ்சென்ற 1ம் வாதியின் வாரிசு நிலையில் 3 முதல் 7 மனுதார்களை 3 முதல் 7 வாரிசுகளாக சேர்க்காமல் வழக்கு அபேட் ஆனதை ரத்து செய்து மனு தாக்கல் செய்ய ஏற்பட்டுள்ள 302 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து

உத்தரவு வேண்டி மனுதாரர்களால் காலவரையறை சட்டம் பிரிவு 5–ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர்களின் மனுவின் சுருக்கம்:–**

2.1 06.06.2025 தேதியன்று 1ம் வாதி இந்த மனுவின் 3 முதல் 7 மனுதாரின் வாரிசாக வைத்துவிட்டு இறந்துபோனார். வழக்கு சொத்தில் 1ம் வாதியின் பாக உரிமை 3 முதல் 7 மனுதார்களுக்கு பாத்தியப்பட்டதாக இருந்து வருகிறது.

2.2 3 முதல் 7 மனுதார்கள் வெளியூரில் குடியிருந்து வரும் நிலையில் அவர்களுக்கு வழக்கு விபரம் தெரிவித்து வழக்கை தொடர்ந்து நடத்துவதற்கு ஏற்பாடு செய்வதற்கு காலதாமதம் ஏற்பட்டவிட்டது. அதனால் உரிய காலத்தில் வாரிசு மனு தாக்கல் செய்யாத காரணத்தால் 1ம் வாதியைப் பொறுத்து இந்த வழக்கு அபேட் ஆகிவிட்டது. 1ம் வாதியைப் பொறுத்து வழக்கு அபேட் ஆனதைப் பொறுத்து ரத்து செய்ய கேட்டு மனு தாக்கல் செய்வதில் 302 நாட்கள் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. மேற்கண்ட காலதாமதம் வேண்டும் என்று ஏற்பட்டதல்ல. 3 முதல் 7 மனுதார்களிடம் வழக்கு விபரம் தெரிவித்து அவர்களை தரப்பினர்களாக சேர்க்க ஏற்பாடு செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தின் காரணமாக உரிய காலத்தில் வாரிசு மனு தாக்கல் செய்ய இயலாது என மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. மனு சங்கதிகளின் அடிப்படையிலும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யாத காரணத்தினாலும், இந்த மனுவை உரிய செலவுத்தொகையுடன் அனுமதிக்க வேண்டும் என்று மேலெழுத்து செய்யப்பட்டதன் அடிப்படையிலும் இந்த மனுவை செலவுத்தொகையுடன் அனுமதித்து தீர்வு காண்கின்றது.

4. இம்மனுவில் தீர்மானிக்க படவேண்டிய பிரச்சனை யாதெனில் மனுதாரர்களின் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா?என்பதாகும்.

5. இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது, ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இருதரப்பிலும் சாட்சியம், சான்றாவணங்கள் இல்லை.

6. தீர்வு:

மனுவானது இந்த வழக்கில் காலஞ்சென்ற 1ம் வாதியின் வாரிசு நிலையில் 3 முதல் 7 மனுதார்களை 3 முதல் 7 வாரிசுகளாக சேர்க்காமல் வழக்கு அபேட் ஆனதை

ரத்து செய்து மனு தாக்கல் செய்ய ஏற்பட்டுள்ள 302 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து உத்தரவு வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்கள் தரப்பில் 06.06.2025 தேதியன்று 1ம் வாதி இந்த மனுவின் 3 முதல் 7 மனுதாரின் வாரிசாக வைத்துவிட்டு இறந்துபோனார் என்றும் வழக்கு சொத்தில் 1ம் வாதியின் பாக உரிமை 3 முதல் 7 மனுதார்களுக்கு பாத்தியப்பட்டதாக இருந்து வருகிறது என்றும் 3 முதல் 7 மனுதார்கள் வெளியூரில் குடியிருந்து வரும் நிலையில் அவர்களுக்கு வழக்கு விபரம் தெரிவித்து வழக்கை தொடர்ந்து நடத்துவதற்கு ஏற்பாடு செய்வதற்கு காலதாமதம் ஏற்பட்டவிட்டது என்றும் அதனால் உரிய காலத்தில் வாரிசு மனு தாக்கல் செய்யாத காரணத்தால் 1ம் வாதியைப் பொறுத்து இந்த வழக்கு அபேட் ஆகிவிட்டது என்றும் 1ம் வாதியைப் பொறுத்து வழக்கு அபேட் ஆனதைப் பொறுத்து ரத்து செய்ய கேட்டு மனு தாக்கல் செய்வதில் 302 நாட்கள் காலதாமதம் ஏற்பட்டுள்ளது என்றும் மேற்கண்ட காலதாமதம் வேண்டும் என்று ஏற்பட்டதல்ல என்றும் 3 முதல் 7 மனுதார்களிடம் வழக்கு விபரம் தெரிவித்து அவர்களை தரப்பினர்களாக சேர்க்க ஏற்பாடு செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தின் காரணமாக உரிய காலத்தில் வாரிசு மனு தாக்கல் செய்ய இயலாது என்று கூறியுள்ளதை கருத்தில் கொண்டும் இரு தரப்பினருக்கும் தங்களது வழக்கினை நிரூபிக்க ஒரு வாய்ப்புகொடுக்க வேண்டும் என்பதை கருத்தில் கொண்டும், வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலையை கருத்தில் கொண்டும் நீதியின் நலனை கருத்தில் கொண்டும், மனுதாரரின் மனுவை அனுமதிப்பது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மனுதாரர்களின் செயலால் எதிர்மனுதாரர்களுக்கு ஏற்பட்ட காலவிரயத்திற்கு ஈடாக எதிர்மனுதாரர்களுக்கு செலவுத் தொகை வழங்க உத்தரவிடுவதன் மூலம் எதிர்மனுதாரர்களுக்கு ஏற்பட்ட கஷ்ட நஷ்டத்தை சரி செய்யலாம் என்றும், இந்நீதிமன்றம் கருதுகிறது.

**முடிவாக,**

**இம்மனு அனுமதிக்கலாம் என தீர்மானித்து 1, 2 மனுதாரர்கள்/1, 2 வாதிகள், வரும் 20.07.2026ம் தேதிக்குள் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு செலவுத் தொகையாக ரூபாய் (ரூ.1000/-) ஆயிரம் செலுத்தும் பட்சத்தில் இம்மனுவை அனுமதித்தும் தவறும் பட்சத்தில் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. அடுத்த வாய்தா 23.07.2026**

இவ்வுத்தரவு என்னால் நேரடியாக சுருக்கெழுத்து – தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு இன்று 2026ம் ஆண்டு ஜூலை மாதம் 16ம் நாள் வியாழக்கிழமை திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

Sd/–M.சிவராஜேஷ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தான்குளம்.

மனுதாரர்கள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் – இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் – இல்லை

Sd/–M.சிவராஜேஷ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தான்குளம்.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
சாத்தான்குளம்.
இ.ம.எண்.1/2026 இன்
அ.வ.எண்.64/2025
நேரிய/வரைவுஉத்தரவு
நாள் 16.07.2026